






# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 22

## ‘கலகொட அத்தே ஞானசார தேரர் ஒரு பௌத்த துறவி அல்ல, அவர் அரசின் ஏவலாளி’

**தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**



**கேள்வி :** சமகால அரசியலில் பாராளுமன்றத்தில் முஸ்லீம்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் தெரிவித்த கருத்தினால் தமிழ் அரசியல் பரப்பில் ஒரு குழப்பமான சூழ்நிலை உருவாகியுள்ளது. கலகொட அத்தே ஞானசார தேரர் ஊடகமொன்றிற்கு ‘அல்லாஹ் கொலைகாரன்’ எனக் கூறிய விவகாரம் பற்றி உங்களது கருத்து என்ன?

**பதில் :** முதலாவதாக அவரை ஒரு தேரர் என்று கூறவே நான் வெட்கப்படுகிறேன். அண்மைக்காலமாக அவரது செயற்பாடுகள் சிறுபான்மை இனத்தை தாக்குகின்றதாகவே அமையப்பெற்றிருக்கின்றது. சாணக்கியன் அவர்கள் முஸ்லீம் தரப்பிற்காக குரல் கொடுத்தது தவறென்று நான் கூறவில்லை. (03)

## திலீபனுக்குத் தடை ஆனால் பண்டாரநாயக்காவுக்கு தடையில்லை தமிழருக்கு என்று புறம்பான கொவிட் விதிமுறைகள் உள்ளனவா? - தவிசாளர் நிரோஷ் கேள்வி

தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினால் அது சுகாதார விதிமுறைகளை மீறும். ஆனால் பண்டாரநாயக்காவுக்கு அஞ்சலி செலுத்தினால் சுகாதாரம் மீறப்படாது. இது தான் அரசாங்கத்தின் இன ரீதியிலான அணுகுமுறை என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.




தியாகி திலீபனின் 34ஆவது நினைவு தினம் நேற்று ஆகும். அவர் உண்ணாநோன்பிருந்த இடத்தில் தமிழ் மக்கள் அஞ்சலிப்பது தேசியக் கடமையாக இருக்கின்றது. ஆனால் தமிழர்களான நாம் தியாகி திலீபனின் சிலைக்கு அண்மையில் கூட செல்ல முடியாதவர்களாகத் தடுக்கப்பட்டுள்ளோம். ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அஞ்சலித்தமைக்காக தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் பிரகாரம் கைது செய்யப்பட்டிருந்தார். இவ்வாறாக இராணுவமும், பொலிசாரும் நினைவுகூர்தல் சுதந்திரத்திற்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். (03)

## ‘சுத்தமான குடிநீர் வேண்டும்’

### கேர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு மக்கள் கோரிக்கை

நீண்ட காலமாக சுத்தப்படுத்தாக நீர்த்தாங்கியிலுள்ள நீரை நீண்ட காலமாக பருகி வருவதாக தெரிவிக்கும் கேர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு மக்கள், குறித்த நீர்த் தாங்கியை உடனடியாகச் சுத்தப்படுத்தித்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (03)




## பொத்துவில் வைத்தியசாலைக்கு மருத்துவமனை உபகரணங்கள் வழங்கி வைப்பு

பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக நேற்று (26) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் வழங்கி வைக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விபக்ஷயே /ஹஸ்மக் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் “ஜன சுவய” கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக நலத்திட்டத்தின் 28வது கட்டமாக மருத்துவமனை உபகரணங்கள் நன்கொடையாக பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் வழங்கி வைக்கப்பட்டது. (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## உச்சக்கட்டத்தில் இனவாதம்

இலங்கையில் இனவாதச் செயற்பாடுகள் என்பது புதியதல்ல. காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக பெரும்பான்மையினரால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும். வளர்க்கப்பட்டுவரும் தீயே இந்த இனவாதம் ஆகும். மதத்தின் பால் வெறிகொண்டு. இந்நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகங்களான தமிழர். முஸ்லீம்கள் இச்சூறாவளிக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

இன மத வாதங்கள் ஒருநாட்டில் தலைதூக்குகின்றபோது அதன் விளைவால் எழும் அடக்குமுறைகள் தொடர்ந்தவண்ணமே இருக்கிறது. இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த வர்களுடன் இனவாதக் கும்பல் ஒன்றித்தே இதுவரை காலமும் செயற்பட்டு வருகின்றது. இவர்களால் தான் இந் நாட்டில் பிரச்சினைகள் எழுகின்றது. அவ்வப்போது நாட்டில் பூகம்பங்களை வெடிக்கவைப்பவர்கள் இவர்கள் தான். தாம் தான் இந்நாட்டில் எல்லாம். தாம் நினைத்தது தான் இந்நாட்டில் சட்டம் என்கிற இறுமாப்புடன் செயற்படும் தெற்கின் இனவாதக் கும்பல். ஜன நாயகப் பண்புகளை அழித்து வருகின் றனர்.

இனவாதக் கருத்துக்களைப் பேசிப்பேசியே இந்நாட்டில் வாழும் மூவினங்களுக்குள்ளும் பிரச்சினைகளை உண்டுபண்ணியுள்ளனர். இன்று மாறி மாறி வணக்கஸ்தலங்களை உடைப்பது சர்வசாதாரணமாக மாறியுள்ளது. இந்த இனவாதத் தீயை அணைப்பதற்குப் பதிலாக தொடர்ந் தும் எண்ணெய் ஊற்றப்பட்டு வளர்க்கப் படுகிறது. இதனால் பாதிக்கப்படப்போவது இந்நாட்டில் வாழும் மூவின மக்களும்தான்.

அடக்குமுறைகளின் வெளிப்பாடுதான் இந்நாட்டில் அஹிம்சை ஆயுதப் போராட்டங்கள் உருவாகக் காரணமாக அமைந்தது என்பது பலருக்கும் தெரிந் ததே. ஒரு நாடு அமைதியாக பொருளா தார ரீதியாக முன்னேற்றமடைந்து பயணிக்கவேண்டுமாயின் இனவா திகள் ஒழிக்கப்படவேண்டும். அவர்க ளால் இந்நாட்டுக்கு எவ்வித பயனும் இல்லை. அவர்களால் இந்நாட்டைக் குழப்பிக்கொண்டிருக்க மாத்திரமே இயலும்.

சட்டமும். சட்ட ஆட்சியும் நடைமுறையில் இருந்தும் கூட. இந்நாட்டின் சிறுபான்மை மக்களை தொடர்ச்சியாக நெருக்குதல்களுக்கு உட்படுத்திவரும் இத்தகைய இனவாதிகளை சட்டத்தின் முன் நிறுத்த முடியாமல் போவது எதற்காக?. சட்டம் அதன் பொறுப்பை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாதது எந்தக் காரணங்களின் அழுத்தங்களினால் என்பது. இன்று சிறுபான்மை சமூகங்களின் கேள்வியாக மாறியுள்ளது.

## கரங்கா வட்டை விவகாரம் தீர்வை நோக்கி நகர்கிறது

(நூருல் ஹுதா உமர்)

மிக நீண்டகாலமாக அம்பாறை– சம்மாந்துறை கரங்கா வட்டை காணியில் விவசாயம் செய்து வந்த விவசாயிகள் இம்முறை விவசாயம் செய்ய முடியாதவாறு சில குழுவினர் இடைஞ்சல் செய்து வருவதனால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளது. இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்களின் கவனத்திற்கு விவசாயிகள் கொண்டு வந்ததை அடுத்து கௌரவ இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, அம்பாறை அரசாங்க அதிபர், பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இது விடயமாக சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி எடுத்துரைத்து தெளிவுபடுத்தி விவசாயிகளுக்கு எதிராக குழப்பம் விளைவிக்க வந்த குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து சுமூகமான நிலையை உருவாக்கி தருமாறு வேண்டியிருந்தார்.

இது தொடர்பில் பொலிஸார் சில நடவடிக்கைகளை எடுத்திருந்த நிலையில் மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசல் காசிம், அல்ஹாபிழ் இசட். நஸீர் அஹமட், எம்.எஸ்.தௌபீக், அலிசப்ரி ரஹீம், சட்டத்தரணி முஸாரப் முதுநபின், இசாக் ரஹ்மான் ஆகியோரை கொண்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகரவை சந்தித்து விவசாயிகளின் ஆவணங்கள் மற்றும் உறுதிப்பத்திரம் இருக்கத்தக்கதாக விவசாயம் செய்ய முடியாதவாறு சில குழுவினர் தடுத்து வருவதனால் அந்த குழுவினருக்கு எதிராக பொலிஸாரை கொண்டு நடவடிக்கை எடுப்பதுடன் எவ்வித அச்சுறுத்தல்களுமில்லாது விவசாயம் செய்யும் சூழலை உருவாக்கி, பாதுகாப்பு வழங்குமாறு அமைச்சரை வலியுறுத்தினர். விடயங்களை கேட்டறிந்த மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர அம்பாறை அரசாங்க அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு விடயம் தொடர்பில் பணிப்புரை விடுத்தார். மேலும் இது தொடர்பில் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அம்பாறை அரசாங்க அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை இன்று சந்தித்து விடயத்தை துரிதப்படுத்தி தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



**நாட்டில் மேலும் 71 கொவிட் மரணங்கள் நேற்று (26.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,680 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1078 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 513,609 ஆக அதிகரித்துள்ளது.**

## முதலாம் திகதி முதல் பயணிகள், பேருந்து ஊழியர்கள் பின்பற்றவேண்டிய விதிகள்

ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் தனியார் பஸ்களில் பயணிகள் மற்றும் ஊழியர்கள் பின்பற்றவேண்டிய விதிமுறைகளை மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர்கள் அமைப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி. ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் தனியார் பேருந்துகளில் பணிபுரியும் ஊழியர்கள் கொவிட் தடுப்பூசியின் 2 டோஸ்களையும் பெற்றிருப்பது கட்டாயமாகும் என்று அமைப்பின் தலைவர் நிலந்த ஏக்கநாயக்க கூறினார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நீக்கப்படுகின்ற எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து. வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட பேருந்துகளின் செயல்பாடு குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு தம்புள்ளையில் இடம்பெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில். அதன்படி. பேருந்து ஊழியர்கள் மற்றும் பயணிகள் முகக்கவசம் அணிவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதுடன். பஸ் நடத்துனரே அதற்கு பொறுப்பாக இருக்கவேண்டும். ஆசன எண்ணிக்கைகளுக்கு அமைய மாத்திரமே பயணிகள் பயணிக்க வேண்டும். அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிகின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அத்துடன். கூடுதலான கட்டணம் அறவிடக்கூடாது. பேருந்துகளில் யாசகம் பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் இந்த புதிய விதிமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

மேலும். பேருந்தில் வெற்றிலை மெல்லுதல் மற்றும் புகைப்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதன் முழுப் பொறுப்பும் நடத்துனருக்கே உள்ளது. இந்த புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கண்காணிப்பதில் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பரிசோதகர்கள் நாடுபூராகவும் சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன். கொவிட் தொற்று பரவல் காரணமாக. பாதிக்கப்பட்டுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களைக் கருத்திற்கொண்டு. அவர்களுக்காக போக்குவரத்து அமைச்சினால் ரூ.50.000 பெறுமதியுள்ள வருடாந்த நிவாரண பொதி பேக்கேஜ் முறையொன்று அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை. இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் பேருந்துகளும் சுகாதார அறிவுறுத்தல்களை முறையாக நடைமுறைப்படுத்தி போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.



## கலகொட அத்தே ஞான...

நானும் எத்தனையோ தடவைகள் பாரளுமன்றில் கதைத்துள்ளேன். இன மத மொழி கடந்து குரல் கொடுப்பது என்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பான விடயம். அதையே சாணக்கியன் அவர்களும் செய்திருக்கின்றார். அல்லாஹ் கொலைகாரன் என்கிற விடயத்தில் தான் முரண்பாடு இருக்கிறது. இது தொடர்பில் முஸ்லீம் தரப்புக்கள் பாராளுமன்றில் கருத்துக்களை வெளியிடாதபோதிலும் சாணக்கியன் பேசியமை பாராட்டத்தக்கது. இது தொடர்பில் ஞானசார தேரருக்கு எதிராக வழக்கு தொடரவேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் இருந்து தமிழ் – முஸ்லீம் ஒற்றுமையை நான் எனது கட்சி சார்பாக வலியுறுத்தி வந்திருக்கிறேன். கலகொட ஞானசார தேரருக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது. இவர் இந்த அரசில் பலமிக்க ஒருவராக வலம் வருகிறார். இன மத வாதங்களைத் தூண்டும் செயற்பாடுகளில் இவர் ஈடுபட்டு வருகிறார்.

**கேள்வி : அப்படியாகவிருந்தால் நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச இவரது செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கின்றார் எனக் கூறுகின்றீர்களா?**

பதில் : ஆம். நிச்சயமாக ஆதரவளிக்கின்றார். காரணம் நேற்றைய தினமும் இவர் வாகனத்தில் பயணித்தபோது பொலிசார் இடைமறித்து சோதனையிட்டபோது தனது மேலாடையையும் கழற்றிக் காண்பித்து ஒரு சண்டியனைப்போல அவர் காட்டுமிராண்டித்தனமாக பேசியது ஒளிநாடாவாக தற்போது வெளியாகியுள்ளது. இது ஒரு துறவி என்கிற பெயரில் ரௌடியாக செயற்படும் நிலை. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். நாடு ஆபத்தில் இருக்கிறது. இதிலிருந்து நாட்டைக் காப்பாற்றவேண்டும். அதனைவிடுத்து அரசு தனது ரௌடிக் கும்பலை இறக்கி இவ்வாறு மிலேச்சத்தனமாக செயற்படுகின்றது.

**கேள்வி : ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் தொடர்பு இல்லையெனக் கூறுகின்றீர்களா?**

பதில் : முற்றுமுழுதாக எனக் கூறவில்லை. ஒரு சிலருக்கு இவர்களுடன் தொடர்பு உண்டு. அதற்காக ஒட்டுமொத்த முஸ்லீம்களையும் இழிவுபடுத்தும் வகையில் செயற்படுவது காத்திரமானதொன்றல்ல. இக்குண்டுத்தாக்குதலில் அல்கைதா, தலிபான் போன்ற தீவிரவாத அமைப்புக்கள் தொடர்பு பட்டிருக்கலாம். அதில் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்குள் முஸ்லீம் அரசியல்வாதிகளும் தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கு தண்டனை வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. நான் மேல் மாகாணத்தில் போட்டியிடுகின்றேன். பல முஸ்லீம் நண்பர்கள் என்னுடன் இருக்கிறார்கள். குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து தண்டனை வழங்கவேண்டுமே தவிர, இஸ்லாத்தில் புனிதமாக போற்றப்படுகிற கடவுள் தான் அல்லாஹ். அவர் மீது அவதூறு பேசுகின்றபோது எந்த முஸ்லீம்களும் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். **(நேர்காணல் – இரணியன்)** **(தொடரும்...)**

## சி.வி.கே.சிவஞானம் அவர்களின் நேர்காணல்...

**கேள்வி :** தமிழ் மக்களுக்கான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை பெற்றுத்தர இந்தியா ஒரு கட்டத்தில் எங்களுக்கு உதவி செய்தது. அது துரதிஷ்டவசமாக கைகூடாமல் போனது. பின்னர் மாகாணசபை உருவாக்கப்பட்டது. அந்த காலகட்டத்திலே வரதராஜா பெருமாள் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். பின்னர் அவர் தமிழீழத்தை பிரகடனப்படுத்திவிட்டு தப்பியோடியதாக ஒரு வரலாறு கூறுகின்றது. எவ்வாறாக இருப்பினும் இந்த மாகாண சபையினுடைய அதிகாரங்கள் அல்லது வடகிழக்கு இணைந்த மாகாணசபையை உருவாக்குவதில் அரசாங்கம் பின் நிற்பது ஏன்?

**பதில் :** இதற்கு இனவாத போக்கும், மதவாதப்போக்கும் தான் அடிப்படையாக இருந்தது. இந்த அரசாங்கம் மட்டுமல்ல, தெற்கத்தைய கட்சிகள் எல்லாமே இது வொரு சிங்கள தேசம் முழு நாடும் சிங்கள மக்களின் ஆட்சிக்குரியது என்றவொரு வெறித்தனத்துடன் தான் இருக்கின்றார்கள். எனவே இந்திய - இலங்கை ஒப்பந்தமானது மிக சட்டபூர்மாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களுடைய பாரம்பரிய வாழ்விடங்கள் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. இப்படியான ஒரு வரைபை இலங்கைக்குள்ளேயே தமிழ் பேசும் மாநிலங்கள் உருவாவதை சிங்கள தேசியவாத வெறித்தனம் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த இணைப்பை உடைத்ததன் காரணமே அதுதான். வழக்கை போட்டு இருந்த இணைப்பை உடைத்ததன் காரணம் அதிகார பகிர்வு அலகு என்று சொல்லப்படுவதை இல்லாமல் ஆக்குவது. இது பிரேமதாஸாவின் காலத்திலே நடக்க தொடங்கிவிட்டது. கச்சேரிகளில் இருந்த மாவட்ட அரச செயலகத்தில் இருந்த அதிகாரங்களை மெல்ல மெல்ல பிரதேச சபைகளுக்கு மாற்றினார்கள்.

எனவே அதிகார பரவலை தரக்கூடிய அலகுகளை சிறிதாக்க வேண்டும். அந்த எண்ணப்பாடு பிரேமதாஸ காலத்தில் தொடங்கி இன்று வரை நடந்து வருகின்றது. அதனால் தான் வடகிழக்கு இணைந்திருக்க கூடாது என்று அவர்கள் நினைக்கின்றார்கள். SLPP என்னும் கட்சி இன்னும் கூட மாகாணத்தை ஏற்றுக்கொள்ளகூட தயாராக இல்லை. மாவட்ட சபைகளுக்குள் சென்றால் மட்டும் போதும் என்ற மாதிரி. அதிகார பகிர்வு அலகை மாவட்டத்திற்கு கொண்டுபோகலாம் என்று நினைக்கின்றேன். இன்று வடமாகாணம் என்னும் பொழுது ஐந்து மாவட்டங்கள் என்றதனால் பலமாக கதைக்கின்றோம். அந்த பலத்தை குறைக்கின்ற எண்ணப்பாடுதான் இது. வடக்கு என்ன கிழக்கும் சேர்ந்தால் தமிழ் மக்கள் இணைந்து பேசுவார்கள் என்பதற்காக அதை அங்கீகரிப்பதற்கு எதிர்க்கின்றார்கள். (தொடரும்...)

## திலீபனுக்குத் தடை...

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சுடப்பட்டு 62 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றாகும். அந் நினைவு கூர்தல் பெருமளவானோரின் பங்குபற்றுதலுடன் நித்தம்புவ கொரெகொல்ல பண்டாரநாயக்கா சமாதியில் இடம்பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்தின் பங்காளிகள் எனப்பலரினதும் பிரசன்னத்துடன் தடைகள் இன்றி அஞ்சலிக்கப்பட்டுள்ளது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இறந்தவர்களை நினைவில் கொள்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நாம் தமிழர் என்பதற்காக அரசாங்கம் வேறுபட்ட அணுகுமுறை வாயிலாக எமது நினைவுகூரலைத் தடுக்கின்றது என்பதே பிரச்சினை. பொலிசாரும் இராணுவத்தினரும் அரசாங்கத்தின் உள்நோக்கத்தினை சட்டம் ஒழுங்கு என நடைமுறைப்படுத்துகின்றனர்.

தனக்குப் பிடிக்காத விடயங்களுக்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துகின்றது. ஏற்கனவே பொன் சிவகுமாரன் நினைவுதினத்தில் நினைவு கூர்வதற்கு தவிசாளராக சென்ற நான் அஞ்சலிக்க முடியாது தடுக்கப்பட்டேன். தடுப்பதற்கான நியாயமாக, பதவி நிலையில் எனக்கு அத்தியாவசிய விடயங்களுக்கே வெளியில் நடமாடும் அனுமதியுள்ளது. நாடு பூட்டப்பட்டுள்ள நிலையில் அஞ்சலிக்க முடியாது என பெருந்தொகை பொலிசாரும் அதிரடிப்படையினரும் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். பின்னர் நான் வெளியில் அஞ்சலி செய்திருந்தேன். ஜனாதிபதி சர்வதேசத்திடம் நினைவு கூர்தல் சுதந்திரத்திற்கு தடையில்லை என கூறிவிட்டு உள்நாட்டில் வேறு வகையான நடைமுறையினைக் கையாள்கின்றார். அடிப்படையில் எமது நினைவுகூரல் சுதந்திரத்தினை நடைமுறைப்படுத்தவே முடியாத இனமாகத்தான் வாழ்கின்றோம் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## சுத்தமான குடிநீர் வேண்டும்...

**(நோட்டன் பிரிட்ஜ் நிருபர் எம்.கிருஸ்ணா)**

நாட்டில் உள்ள மக்களுக்கு முறையான சுத்தமான குடி நீரை வழங்க அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தாலும் மலையக பெருந்தோட்டங்களில் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அந்த வகையில் நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்ட மக்கள் நாளாந்தம் அசுத்தமான குடி நீரினை பருகி வருவதாக குற்றம் சுமத்துகின்றனர். மடுல்சீமை பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்டத்தில் மக்கள் நாளாந்தம் பருகும் குடி நீர் நீர்தாங்கி நீண்டகாலமாக சுத்தம் செய்யப்படாமையினால் குறித்த தோட்ட மக்கள் தொடர்ந்தும் அசுத்தமான குடி நீரினை பருகி வருகின்றனர். இதனால் தொற்று நோய்கள் ஏற்படலாமென அச்சம் தெரிவிக்கின்றனர். குறித்த நீர்தாங்கியில் உள்ள குடி நீரினை மத்திய பிரிவு தோட்டத்தில் வாழும் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாவித்து வருகின்றனர்.

நாட்டில் தீவிரமாக கொரோனா மற்றும் டெல்டா போன்ற தொற்று நோய்கள் பரவி வருகின்ற நிலையில் இது போன்ற அசுத்தமான நீரினை இந்த கேர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்ட மக்கள் பருகுகின்றமையால் வயிற்றுவலி, வயிற்றோட்டம், வாந்திபேதி, டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் ஏற்படும் அச்சம் காணப்படுவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த நீர்த்தாங்கியினை சுத்தம் செய்து முறையான நீரினை எமக்கு வழங்குங்கள் என தோட்ட நிர்வாகத்திடம் பலமுறை கோரிக்கை விடுத்து வந்தாலும் இதுவரையில் சுத்தப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கின்றனர்.

மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்தில் இருந்து உயர் அதிகாரிகள் பார்வையிட வரும்போது மாத்திரம் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாத்திரம் இந்த நீர் தாங்கி சுத்தம் செய்யப்படும். ஏனைய காலப் பகுதியில் இந்த நீர் தாங்கி மாத்திரம் அல்ல ஏனைய நீர்த் தாங்கிகளையும் தோட்ட நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. ஆனால் தோட்ட நிர்வாகத்தில் நீர் தாங்கியினை சுற்றி பரிசோதனை செய்யப்பட்ட குடிநீர், பாதுகாக்கப்பட்ட குடி நீர். என தோட்ட நிர்வாகத்தினால் ஆங்காங்கே பெயர் பலகைகள் மாட்டப்பட்டிருந்தாலும் சுத்தம் செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்வதில்லை. பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்ட மக்களுக்கு முறையான சுத்தமான குடி நீரை பருகுவதற்கு தோட்ட நிர்வாகமும் அரசியல்வாதிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பொத்துவில் வைத்தியசாலைக்கு...

**(பைஷல் இஸ்மாயில்)**

இதற்கமைவாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களினால் பன்னிரெண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ.225,000) பெறுமதி வாய்ந்த High Flow Oxygen Unit இயந்திரமொன்று, ஆறு இலட்சம் ரூபா (ரூ.600,000) பெறுமதி வாய்ந்த 5 Function ICU Bed இயந்திரமொன்று மற்றும் பன்னிரெண்டு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த (1,2000,000) Defibrillator இயந்திரமொன்று இவ்வாறு பொத்துவில் தள மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் மொகமட் நியாஸ் அவர்களிடம் வழங்கப்பட்டதுடன் அம்பாறை மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சக்தி தொகுதி அமைப்பாளர் ஹசன் அலி, அதன் இணை அமைப்பாளர் கயான் தர்ஷன, லாஹுகல பிரதேச சபை உறுப்பினர் பாட்டலி ரோஹண கயந்த, லாஹுகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஆர். சந்திரசேன உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கொல்கத்தாவை வீழ்த்தி பிளே-ஒப் சுற்றுக்கு முன்னேறியது சி.எஸ்.கே




(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

சென்னை சூப்பர் கிங்ஸ்-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஐ.பி.எல். 2021 கிரிக்கெட்டின் 38-வது லீக் ஆட்டம் அபு தாபியில் நடைபெற்றது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் கெப்டன் மோர்கன் டொஸ் வென்று பெட்டிங் தெரிவு செய்தார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் வெய்ன் பிராவோ இடம் பெறவில்லை. அதற்குப் பதிலாக சுட்டிப்பையன் சாம் கர்ரன் இடம் பிடித்துள்ளார். கொல்கத்தா அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

கொல்கத்தா அணியின் ராகுல் திரிபாதி 33 பந்தில் 45 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தினேஷ் கார்த்தி அதிரடியாக விளையாடி 11 பந்தில் 26 ரன்கள் அடிக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 171 ரன்கள் சேர்த்தது. நிதிஷ் ராணா 27 பந்தில் 37 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் ஷர்துல் தாகூர். ஹசில்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். பின்னர் 172 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் களம் இறங்கியது. தொடக்க வீரர்கள் ருதுராஜ் கெய்க் வாட். டு பிளிஸ்சிஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ருதுராஜ் கெய்க்வாட் 28 பந்தில் 40 ரன்களும். டு பிளிஸ்சிஸ் 30 பந்தில் 43 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மொயீன் அலி 28 பந்தில் 32 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த அம்பதி ராயுடு 10 ரன்னிலும். சுரேஷ் ரெய்னா 11 ரன்னிலும். டோனி 1 ரன்னிலும் ஆட்டமிழந்தார். இதனால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சிக்கல் ஏற்பட்டது. கடைசி 2 ஓவரில் 26 ரன்கள் தேவைப்பட்டது. 19வது ஓவரை பிரதித் கிருஷ்ணா வீசினார். இந்த ஓவரின் முதல் இரண்டு பந்துகளில் இரண்டு ரன்கள் அடிக்கப்பட்டது. 3வது மற்றும் 4வது பந்தை இமாலய சிக்சருக்கு தூக்கினார் ஜடேஜா. அதோடு மட்டுமல்லாமல் அடுத்த இரண்டு பந்துகளையும் பவுண்டரிக்கு விரட்டினார். இந்த ஓவரில் 22 ரன்கள் கிடைக்க சென்னை அணிக்கு கடைசி ஓவரில் 4 ரன்கள் மட்டுமே தேவைப்பட்டது.

கடைசி ஓவரை சுனில் நரைன் வீசினார். முதல் பந்தில் சாம் கர்ரன் ஆட்டமிழந்தார். 2வது பந்தில் ஷர்துல் தாகூர் ரன் அடிக்கவில்லை. ஆனால் 3வது பந்தில் ஷர்துல் தாகூர் 3 ரன் எடுத்தார். இதனால் கடைசி இரண்டு பந்தில் 1 ரன் தேவைப்பட்டது. 5வது பந்தை சந்தித்த ஜடேஜா அவுட் ஆனார். இதனால் கடைசி பந்தில் ஒரு ரன் தேவைப்பட்டது. தீபக் சாஹர் களம் இறங்கினார். கடைசி பந்தில் கொல்கத்தா அணி ரன் அடிக்க விடாமல் தடுத்துவிட்டால் போட்டி 'டை'யில் முடிந்து சூப்பர் ஓவர் கடைபிடிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சாஹர் ஒரு ரன் அடிக்க சென்னை சூப்பர் கிங்ஸ் 2 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 10 போட்டிகளில் 8ல் வெற்றி. புள்ளிகள் பட்டியலில் முதல் இடம் பிடித்ததுடன் பிளே-ஓப் சுற்று வாய்ப்பையும் உறுதி செய்தது.

## 07 ஆண்டுகளை நிறைவுசெய்தது 'மங்கள்யான்'

பெங்களூரு-செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட 'மங்கள்யான்' விண்கலம், சுற்றுவட்டப் பாதையில் ஏழு ஆண்டுகள் பயணத்தை நிறைவு செய்து எட்டாவது ஆண்டில் நுழைந்து உள்ளது.

செவ்வாய் கிரகத்தை ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான, 'இஸ்ரோ' சார்பில் 2013ம் ஆண்டு, நவ., 5ம் திகதி, மங்கள்யான் என்ற விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இது, 2014 செப்., 24 முதல் செவ்வாய் கிரகத்தை சுற்றி வருகிறது. இந்த விண்கலம் ஆறு மாதங்கள் மட்டுமே இயங்கும் என முதலில் கணிக்கப்பட்டிருந்தது. எனினும், சுற்றுவட்டப் பாதையில் ஏழு ஆண்டுகள் தன் பயணத்தை நிறைவு செய்து, எட்டாவது ஆண்டில் மங்கள்யான் விண்கலம் அடி எடுத்து வைத்துள்ளது.





இது குறித்து, மங்கள்யான் திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை கூறியதாவது, பல ஆண்டுகளாக செவ்வாய் கிரகத்தை மங்கள்யான் விண்கலம் சுற்றி வந்து ஆராய்ச்சி மேற்கொள்வது மகிழ்ச்சியாக உள்ளது. அதன் செயல் திறன் நன்றாகவே உள்ளது. அடுத்த ஒரு ஆண்டிற்கு இந்த விண்கலம் நன்றாக இயங்கும் என எதிர்பார்க்கிறேன். இந்த விண்கலம் வாயிலாக செவ்வாய் கிரகம் குறித்த பல தரவுகளை இஸ்ரோ சேகரித்து வருகிறது.

செவ்வாய் கிரகத்தில் ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் மாற்றங்களை அறிந்துகொள்ள இது உதவி வருகிறது என அவர் கூறினார். இஸ்ரோவின் முன்னாள் தலைவரும், மங்கள்யான் திட்டக் குழுவை தலைமை தாங்கி வழிநடத்தியவருமான ராதாகிருஷ்ணன் கூறுகையில், "உண்மையில், எனக்கு திருப்திகரமான உணர்வை அளித்துள்ளது," என, நெகிழ்ச்சியுடன் கூறினார்.

## சீனாவில் ஓட்டுனர் இல்லாத டாக்ஸிகள்

சீனாவின் பாய்ட் நிறுவனம் ஓட்டுனர் இல்லா டாக்ஸிகளின் சோதனை ஓட்டத்தை நகர சாலைகளில் தொடங்கியுள்ளது. ஷாங்காயின் ஜியாடிங் மாவட்டத்தில் இதற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட 5.6 கிலோ மீட்டர் நீள சாலையில், பாய்ட் நிறுவனத்தின், ஓட்டுனர் இல்லா ஸ்மார்ட் டாக்ஸிகள் விடப்பட்டுள்ளன. அந்நிறுவனத்தின் ஸ்மார்ட் செயலி மூலம் புக் செய்து பயணிகள் ஸ்மார்ட் டாக்ஸியில் பயணிக்கலாம்.

2023ஆம் ஆண்டுக்குள் சீனாவின் 30 நகரங்களில் ஸ்மார்ட் டாக்ஸிகளை விட பாய்ட் நிறுவனம் திட்டமிட்டுள்ள நிலையில், சீனாவில் 2030 ஆம் ஆண்டுக்குள் ஓட்டுனர் இல்லா டாக்சி தொழில்நுட்ப துறையின் சந்தை மதிப்பு 35 பில்லியன் அமெரிக்க டொலராக உயரும் என சந்தை வல்லுனர்கள் கணித்துள்ளனர்.

## பிரபல நைக் நிறுவனத்துக்கு ஏற்பட்ட பரிதாப நிலை

அமெரிக்காவின் நைக் என்ற விளையாட்டு உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தால் தேவைப்படும் பொருட்களை விநியோகிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நைக் நிறுவனமானது, தேவைக்கு தகுந்த பொருட்களை விநியோகிக்க முடியாததால், இந்த ஆண்டிற்குரிய தங்களின் விற்பனை இலக்கை மாற்ற தீர்மானித்திருக்கிறது. கொரோனா தொற்று காரணமாக, பல நாடுகள் ஊரடங்கு நடைமுறைப்படுத்தியிருப்பதால் உற்பத்தி மற்றும் விநியோக சுழற்சி பாதிப்படைந்திருப்பதாக நைக் நிறுவனம் கூறியிருக்கிறது.

நைக் நிறுவனம் உற்பத்தி செய்யும் காலணிகளுக்கு சர்வதேச அளவில் அதிக வரவேற்பு உண்டு. இந்தோனேசியா மற்றும் வியட்நாமில் இருக்கும் தொழிற்சாலைகளில் நைக் நிறுவனத்தின் காலணிகள் 75% தயாரிக்கப்படுகிறது. ஆனால் அங்கு நடைமுறைப்படுத்தியிருந்த கொரோனா ஊரடங்கு காரணமாக, இந்த வருடத்தில் மட்டும் 10 வாரங்களுக்கு உற்பத்தி பாதிப்படைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் உற்பத்தி செய்த பொருட்களை ஐரோப்பா போன்ற பகுதிகளுக்கு விநியோகிக்கக்கூடிய நேரம் அதிகரித்திருப்பதாக இந்நிறுவனம் கூறியிருக்கிறது.

## ஜேர்மனி : சமூக ஜனநாயகக் கட்சி வெற்றி

ஜேர்மனியின் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியினர் வெற்றியைப் பெற்றனர். 2005 முதல் ஏஞ்சலா மெர்க்கலின் கீழ் 16 வருடங்கள் ஆட்சி செய்துவந்த பழமைவாத கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் ஆட்சி இத்துடன் முடிவுக்கு வருகிறது.

மெர்க்கலின் CDU/CSU பழமைவாதக் கூட்டணிக்கு 24.5% வாக்குகள் கிடைத்து 194 இடங்களை கைப்பற்றிய நிலையில், மத்திய-இடது சமூக ஜனநாயகவாதிகள் கட்சி (SPD) 26.0% வாக்குகளைப் பெற்று 205 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

மேலும், பசுமை அரசியல் கட்சிகள் என்று சொல்லக்கூடிய Alliance 90/The Greens கூட்டணி காட்சிகள் 116 இடங்கள், FDP 91 இடங்கள், AFD 84 இடங்கள், The Left கட்சி 39 இடங்கள் மற்றும் இதர காட்சிகள் 1 இடத்தையம் கைப்பற்றின.

SDP கட்சி கடந்த 2017 பொதுத் தேர்தலின் போது, 20.5% வாக்குகளை மட்டுமே பெற்ற நிலையில், தற்போது கூடுதல் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றுள்ளது.

தற்போது ஏதேனும் ஒரு கட்சி பெரும்பான்மையை பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மற்ற கட்சிகளுடன் கூட்டணியை அமைக்கவேண்டும். கிறிஸ்துமஸ் விடுமுறைக்குள் கூட்டணிகள் முடிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த நிலையில், Olaf Scholz ஜேர்மனியின் அடுத்த சான்செலராக பதவியேற்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியானால், SDP கட்சி சார்பாக பதவியேற்கும் நான்காவது சான்செலராக Scholz இருப்பார்.

ஆனால், இதற்கிடையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த மெர்க்கலின் CDU கட்சியின் தலைவர் Armin Laschet, "தேர்தலில் முதலிடத்தை பிடித்த கட்சியில் இருந்துதான் எப்போதும் சான்செலார் தேர்தெடுக்கப்படுவார் என்பது அல்ல, என்னைப் பொறுத்தவரை, ஒவ்வொரு கூட்டணி கட்சியும் சம்பந்தப்பட்ட, அனைவரும் வெளிப்படையாக காணக்கூடிய ஒரு அரசாங்கத்தை நான் விரும்புகிறேன் - வெறும் சான்செலர் மட்டும் பிரகாசிக்கக்கூடிய ஒரு அரசாங்கமாக இருக்கக்கூடாது" என்றார்.